ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: **dcommunications@cbsl.lk, communications@cbsl.lk**
வெப்தளம்: **www.cbsl.gov.lk**

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | நாணயத் திணைக்களம் |
| திகதி | 23.01.2017 |

## கொழும்பு 5இல் அமைந்துள்ள விசாகா வித்தியாலயத்தின் 100ஆவது ஆண்டு நிறைவினைக் குறிக்கும் ஞாபகார்த்த நாணயக் குத்தி

நாட்டின் பிரதான பாடசாலை என்ற ரீதியில் கொழும்பு 5இல் அமைந்துள்ள விசாகா வித்தியாலயம் நாட்டிற்கு ஆற்றிய அதன் பங்களிப்பினை அங்கீகரிக்கின்ற விதத்திலும் அதன் 100ஆவது ஆண்டு நிறைவினைக் குறிக்கும் விதத்திலும் ரூ.2,000 முகப்புப் பெறுமதியினைக் கொண்ட சுற்றோட்டப்படுத்தப்படாத வெள்ளி ஞாபகார்த்த நாணயக் குத்தியொன்றினை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டிருக்கின்றது.

முதலாவது நாணயக் குத்தியானது மேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களிடம் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் இந்திரஜித் குமாரசுவாமியினால் 23.01.2017 அன்று கொழும்பு 5இலுள்ள விசாகா வித்தியாலயத்தின் ஜெறிமியாஸ் டயஸ் மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் வைத்து அலுவல்சார் ரீதியாக கையளிக்கப்பட்டது.

<u>நாணயக் குத்தியின் விபரங்கள்:</u>

<u>நாணயக் குத்தியின் முன்பக்கம்</u>




<u>நாணயக் குத்தியின் பின்பக்கம்</u>



நாணயத்தின் முன்பக்கத்தில் செலஸ்ரினா ஜெறிமியாஸ் டயஸின் உருவப்படத்துடன் “1917 VISAKHA VIDYALAYA CENTENARY 2017" என்ற சொற்கள் ஆங்கிலத்தில் நாணயத்தின் மேல் சுற்றுவட்டத்திலும் "SELESTINA JEREMIAS DIAS" குத்தியின் கீழ் ஓரத்திலும் காணப்படுகின்றன.

தங்கத்திலான விளக்கொன்றின் உருவப்படம் மத்தியில் காணப்படுகின்றது. முகப்புப் பெறுமதியான “2,000” பெரிய இலக்கத்திலும் இலங்கை நாணயம் என்ற பெயர் சொற்களில் சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கிலத்திலும் ஆண்டு “2017” விளக்கிற்கு சற்று கீழேயும் காணப்படுகின்றன. "PAŃŃAYA PARISUJJHATI" என்ற சொற்கள் ஆங்கிலத்தில் நாணயத்தின் மேல் சுற்றுப்புறத்திலும் நாட்டின் பெயர் சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நாணயக் குத்தியின் கீழ் ஓரத்திலும் பொறிக்கப்பட்டுள்ளன.

**விபரங்கள்:**

| | |
|---|---|
| நாணய இனப் பெறுமதி | ரூ.2,000 |
| வகை | கறை படியாதது |
| உலோகம் | வெள்ளி (0.925) விளக்கு தங்க முலாம் பூசப்பட்டது |
| விட்டம் | 38.61 மி.மீ. |
| நிறை | 28.28 கிறாம் |
| வடிவம் | வட்டம் |
| ஓரம் | வெட்டப்பட்டது |
| வழங்கல் | 1,000 குத்திகள் |

நாணயக் குத்திகள் நிர்ணயிக்கப்பட்ட விலையான ரூ.12,200/- இல் விசாகா வித்தியாலயம் கொழும்பு 5இல் விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ளது.

கண்காணிப்பாளர்
நாணயத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01